திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம் கிளியாப்பட்டு ஊராட்சி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. **மு.பாலகிருஷ்ணன்** அவர்களின் செயல்முறைகள்

ந.க. எண். 01 / 2024 நாள் : 27.06.2024

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு – திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், கிளியாப்பட்டு கிராம சர்வே எண். 40/1B, 0.24.33 ச.மீ (0.60) ஏக்கர் 17 மனைகள் பரப்பில் உள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்டது. உள்ளாட்சி மூலம் இறுதி ஒப்புதல் அளித்தல் – சார்பு.

பார்வை : நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் நடவடிக்கை இணையதள விண்ணப்ப எண். L75A1L7K/2024/TVM தி.மலை நாள் : 12.06.2024

உத்திரவு :

பார்வையில் காணும் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் உத்திரவின்படி திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம் கிளியாப்பட்டு கிராம சர்வே எண். 40/1B, பழைய சர்வே எண்.(40/1B, 40/1C, 40/1D, 40/1E) 0.24.33 ச.மீ (0.60) ஏக்கர் 17 மனைகள் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்டதை தொடர்ந்து அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை 04.05.2017–ன்படி கிளியாப்பட்டு ஊராட்சி அமைப்பு நில பயன் மற்றும் கட்டணம் 3 விழுக்காடு தொகை ரூ.27000/– (ரூபாய் இருபத்தி ஏழாயிரம்) Securety கட்டணம் ரூ.17000+1000 மற்றும் சாலை பராமரிப்பு கட்டணம் ரூ.3816 ஆக மொத்தம் 48816 (நாற்பத்தி எட்டாயிரத்து எட்நூற்று பதினாறு மட்டும்) கிளியாப்பட்டு ஊராட்சி வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது. தொடர்ந்து மனை எண்கள். 1 முதல் 17 வரை உள்ள மனைகளுக்கு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கான வரைபடத்தின் உட்பிரிவுக்கும் உள்ளாட்சிகள் மூலம் இறுதி ஒப்புதல் அளித்த ஊராட்சி தீர்மான எண். 47 இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள் மற்றும் நீர் தேக்கதொட்டி கட்டும் இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு போன்ற இடங்கள் பத்திரபதிவு 1869/2024 நாள் : 09.02.2024 கிராம ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் பெயரில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அதை தொடர்ந்து திருவண்ணாமலை நகர ஊரமைப்பு உதவி இயக்குனர் திருவண்ணாமலை மாவட்டம் ம.ந.ஊ.இ (தி.மலை) எண். 189/2024 எண்ணிடப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் வாங்கப்பட்டு கிளியாப்பட்டு ஊராட்சி மன்றத்தால் **ஸ்ரீ தனலட்சுமி நகர்** பெயரிட்ட உத்தேச 17 மனைகளுக்கு கிளியாப்பட்டு ஊராட்சி மன்றத்தால் ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

மபாலகிருஷ்ணன்
தலைவர்,
கிளியாப்பட்டு ஊராட்சி
துரிஞ்சாபுரம் ஒன்றியம்

இணைப்பு :
1. பார்வை 1–ல் அலுவலக கடித நாள்
2. அரசு வழிகாட்டி மதிப்பு
3. உரிய கட்டணம் செலுத்திய வங்கி ரசீது நகல்